**Awareness Programme on Intellectual Property Rights (IPR) held on 10 February, 2021 at Bharathidasan University, Trichy**
**Organiser: Dr. M. SELVAM**

# The Times of India, Tiruchirappalli Edition, Page No.: 04, Dated: 16.02.2021

## Awareness event on IPR held at BDU



An online awareness programme on intellectual property rights (IPR) was organised by department of commerce and financial studies of the Bharathidasan University(BDU) on February 10. The event organised in association with MSME Development Institute, Chennai, and nearly 160 participants including entrepreneurs, faculty members and scholars from various colleges and universities took part. Speaking at the event, M Selvam, vice-chancellor, BDU, said that the industry and educational institutions in the country should collaborate to produce and develop various intellectual property rights.

# Dinamani, Tiruchirappalli Edition, Page No.: 02, Dated: 12.02.2021

திருச்சி — வெள்ளிக்கிழமை, 12 பிப்ரவரி 202

## 'அறிவுசார் சொத்துரிமைகளை அதிகளவில் உருவாக்க வேண்டும்'

திருச்சி, பிப்.11: அறிவுசார் சொத்துரிமைகளை அதிகளவில் உருவாக்க வேண்டும் என்றார் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ம. செல்வம்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத் தொழில்முனைவு மற்றும் திறன் மேம்பாட்டு மையம், வணிகவியல் மற்றும் நிதிக் கல்வியியல் துறை, சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம்,எம்எஸ்எம்இ இன்ஸ்டிடியூட் ஆகியவை இணைந்து இணைய வழியில் வியாழக்கிழமை நடத்திய அறிவுசார் சொத்துரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்து ம. செல்வம் மேலும் பேசியது:

புதுமையான, பயனுள்ள மற்றும் அரிய எண்ணங்கள் ஆகியவை அறிவுசார் சொத்துரிமைகளாக மாற்றத் தகுதியுடையவை. அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்புச் சட்டமானது இத்தகைய எண்ணங்களைப் பாதுகாத்து, அதற்கான பலன்களை வழங்குகிறது.

படைப்பாளிகள் மற்றும் காப்புரிமை பெற்றவர்கள் தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தி தங்களது படைப்புகளைப் பாதுகாக்கவும், தகவல்களைப் பாதுகாக்கவும் தேவையான நடைமுறைகளை இக்காப்புரிமைச் சட்டம் வழங்குகிறது.

உலகளவில் அங்கீகரிக்கப்படும் அறிவுசார் சொத்துரிமைகளில் பதிப்புரிமை, வணிகச் சின்னம், படைப்புரிமம், புவிசார் குறியீடு, வணிக ரகசியம் ஆகியவையும் அடங்கும். எனவே, அறிவுசார் சொத்துரிமைகளை அதிகளவில் உருவாக்க வேண்டும். தொழில் துறை, பல்கலைக்கழகம், கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவை இணைந்து இதில் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்றார் அவர்.

தொழில்முனைவு மற்றும் திறன் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் மு. செல்வம் பேசுகையில், அறிவுசார் சொத்துரிமைகளே ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்தியாவில், சிறு, குறுந்தொழில்கள் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து இளைஞர்களின் புதிய கண்டுபிடிப்புகளை அறிவுசார் சொத்துரிமைகளாக மாற்றுவதில் பாரதிதாசன் பல்கலை. திறன் மேம்பாட்டு மையம் முக்கியப் பங்காற்றி வருகிறது என்றார்.

சிறு, குறுந்தொழில்கள் மேம்பாட்டு நிறுவன சென்னை இணை இயக்குநர் சுரேஷ் பாபுஜி பேசுகையில், இந்தியாவில் உள்ள46 மில்லியன் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மூலம் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. 6 ஆயிரம் வகை பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்றைய போட்டி சூழலில் நிறுவனங்கள் தங்களை வளர்த்துக் கொள்வது சவாலாக உள்ளது. இத்தகைய விழிப்புணர்வு நிகழ்வுகள் சிறு, குறு நிறுவன வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாக அமையும் என்றார் அவர்.

உதவி இயக்குநர் சீனிவாசலு, தொழில்முனைவோர் பவித்ரா ராமசுந்தரம், காப்புரிமைப் பகுப்பாளர் சுகன்யா ஜெயவேலு, வழக்குரைஞர் பார்வதி பிரசன்னா ஆகியோரும் பேசினர். நிகழ்வில் 160 தொழில் முனைவோர், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பல்வேறு கல்லூரிகளின் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் பங்கேற்று பயன் பெற்றனர்.



அறிவுசார் சொத்துரிமை விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்துப் பார்வையிடுகிறார் பாரதிதாசன் பல்கலை. துணைவேந்தர் ம. செல்வம் (இடது). உடன், பேராசிரியர்கள், மாணவர்கள்.